DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : முனியசாமி | Father/Husband Name : வேல்ராஜ் |
| Age : 54 | Village : தாயில்பட்டி |
| Taluk : | Calling : மெக்கானிக் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2 Jun 2026 12:44

(A1 Present, A2 not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் தாயில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி ரஞ்சித் என்பவரை எனக்கு தெரியும். 2வது எதிரி புஷ்பராஜ் என்பவரை எனக்கு தெரியாது. அ.சா.1 வேளாங்கன்னி என்பவரை எனக்கு தெரியும். அவர் என்னுடைய வாகனத்தில் ஓட்டுனராக பணிபுரிந்து வந்தார். அவர் சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார்.

2. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னிடம் கையெழுத்து மட்டும் தான் வாங்கியிருந்தார்கள், வேறு எதுவும் விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –

3. என்னுடைய கடை அருகே தான் அ.சா.2 – மாரிமுத்து சலூன் கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். நான் பொதுவாக எனது கடையை எத்தனை மணிக்கு திறந்து அடைப்பேன் என்றால் நான் காலை 08.30 மணிக்கெல்லாம் திறந்து இரவு 09.00 மணிக்கு அடைத்துவிடுவேன். இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றபோது நான் கடையில் இல்லை.

4. கடந்த 03.02.2020ம் தேதி காலை 07.00 மணியளவில் எதிரிகள் சாட்சி வேளாங்கன்னியை தகாத வார்த்தைகளால் பேசி, தாக்கி காயம் ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்த சம்பவத்தை நேரில் பார்த்தாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

2 Jun 2026 12:46

(Sd/-S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy //P.P

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : வினித் | Father/Husband Name : காபிரியேல் |
| Age : 30 | Village : கலைஞர் காலனி, தாயில்பட்டி |
| Taluk : | Calling : ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2 Jun 2026 12:49

(A1 Present, A2 not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் தாயில்பட்டி கலைஞர் காலனியில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன். சாட்சி சார்லஸ் என்பவரை எனக்கு தெரியும்.

2. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்னர் காலை நேரத்தில் போலீசார் கலைஞர் காலனியில் உள்ள தாஸ் கல்யாண மண்டபம் அருகே உள்ள இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து, என்னிடமும், சார்லஸிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

3. போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கி தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

2 Jun 2026 12:49

(Sd/-S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy //P.P